# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W. 8.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. துர்க்கை முத்து. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து விசைத்தறி தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன ராமநாதன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். நானும், முத்துக்குமார் என்பவரும் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு மாலையில் 1ம் எதிரி, இறந்துபோன ராமநாதன் மற்றும் ஒருவருடன் சேர்ந்து கொண்டு இருசக்கர வாகனத்தில் ஒரு சின்ன கிராமத்திற்குள் போனார்கள். அந்த கிராமம் பெயர் ஞாபகமில்லை. நான் எந்த இடத்திலிருந்து பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. மேற்படி மூவரும் திரும்பி வரும்போது அவர்களுடன் தினேஷ்குமாரும், மற்றொருவரும் இருந்தார்கள். ராமநாதன் அவர்களுடன் திரும்பி வரும்போது இல்லை. 10 நாட்கள் கழித்து மேற்படி ராமநாதன் ஒரு காட்டிற்குள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். அவரை 1ம் எதிரியும், இன்னொரு பையனும் சேர்ந்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். 1, 2 எதிரிகளுக்குள் இருந்த கள்ளத் தொடர்பு காரணமாக அவரை கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் அப்போது கோவில்பட்டிக்கு சென்று கொண்டிருந்தேன். நான் பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். நான் குருவிகுளத்திலிருந்து கோவில்பட்டி நோக்கி சென்று கொண்டிருந்தேன். மேற்படி நபர்களை எங்கு வைத்து பார்த்தேன் என்று என்னால் சொல்லமுடியாது. அவர்கள் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது கோவில்பட்டியில் வைத்து பார்த்தேன். கோவில்பட்டியில் வைத்து பார்க்கும்போது மாலை நேரம். மீண்டும் அவர்கள் வரும்போது நான் அவர்களை குருவிகுளத்தில் வைத்து பார்த்தேன். மாலையில்தான் பார்த்தேன். அப்போது மாலை 6 மணியிருக்கும். அப்போது நான் கோவில்பட்டியிலிருந்து போய்விட்டேன். நான் அப்போது குருவிகுளத்தில் எங்கள் வீட்டின் அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போதும் மேற்படி நபர்கள் இருசக்கர வாகனத்தில்தான் சென்றார்கள். என்ன வகையான இருசக்கர வாகனம் என்று எனக்குத் தெரியாது. அதன் நிறம் தெரியாது. மேற்படி இறந்துபோன ராமநாதன் என் மனைவியின் சித்தப்பா மகன். மேற்படி ராமநாதன் இறந்துபோன விபரம் சங்கரன்கோவிலில் இருக்கும்போது தெரியும். அதுகுறித்து அ.சா.1 சொல்லி எனக்குத் தெரியும். காலை சுமார் 8 மணியளவில் சொன்னார். அதற்கு மேல் எனக்கு எதுவும் தெரியாது. ராமநாதன் இறந்த விபரத்தை போலீசார் எனக்குச் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. முதல் விசாரணை சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக இளஞ்சிறார் நீதிமன்றத்திலும் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன்

என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் 1ம் எதிரியான தினேஷ்குமாரை தெரியாது என்றும், சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சிறார் நீதிமன்றத்தில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை இன்றுதான் நீதிமன்றத்தில் வைத்து முதன்முதலாக பார்க்கிறேன் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.11.13 16:29:18 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W. 9.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்வமுத்துக்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025.

Accused are present.

முதல் விசாரணை

நான் தற்போது ஐவாய்புலிப்பட்டியில் குடியிருந்து பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன ராமநாதன் என் மைத்துனர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இறந்துபோன ராமநாதன் திருப்பூரில் வேலை செய்து வந்தார். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு நானும், அ.சா.8 ம் கோவில்பட்டி பேருந்து நிலையத்தில் காலை சுமார் 8 மணியளவில் நின்று கொண்டிருந்தபோது ராமநாதன், 1ம் எதிரி மற்றும் சிறார் எதிரியான பாலசுந்தரம் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள். அதே பேருந்து நிலையத்தில் நான் நின்று கொண்டிருந்தபோது அவர்கள் திரும்பி வரும்போது அவர்களுடன் மேற்படி ராமநாதன் இல்லை. எட்டு நாளாக ராமநாதனை அவரது குடும்பத்தாருடன் தேடிவந்தோம். ஒருநாள் கல்லூரணி அருகே அவர் பிணமாக இருப்பதாக தகவல் கிடைத்து அவரது குடும்பத்தார் அவரை நெஞ்சில் குத்தியிருந்த பச்சையை வைத்தும், அவரது அடையாள அட்டையை வைத்தும் அடையாளம் கண்டார்கள். அவரது உடல் அழுகிய நிலையில் இருந்தது. 1, 2 எதிரிகளுக்குள் இருந்த கள்ளத் தொடர்பின் காரணமாக ராமநாதனை

கொன்றுவிட்டதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆய்வாளர் விசாரணையில் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி ராமநாதன், 1ம் எதிரி மற்றும் சிறார் எதிரி பாலசுந்தரம் ஆகியோர் நான் கோவில்பட்டி பேருந்து நிலையத்தில் இருக்கும்போது இருசக்கர வாகனத்தில் சென்றதாக சொன்னேன். ஆஜர் எதிரிகளுக்குள் உள்ள கள்ளத் தொடர்பு காரணமாக ராமநாதனை கொன்றுவிட்டதாக நான் கேள்விப்பட்டதாக போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் இளஞ்சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கில் நான் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியங்கள் இல்லாத நிலையில் நான் இறந்துபோனவரின் மைத்துனர் என்பதால் இந்த வழக்கில் சந்தர்ப்ப சாட்சியத்தை உருவாக்குவதற்காக ஆய்வாளர் என்னை சாட்சியாக போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கோவில்பட்டிக்கு காலையில் அ.சா.8 உடன் வந்தேன். 7 ஆண்டுகளுக்கு முன்பே எதிரிகளுக்குள் கள்ளத் தொடர்பு இருப்பதாக அ.சா.1 சொன்னார். ராமநாதன் இறப்பதற்கு முன்பே சொன்னார். அ.சா.1 குருவிகுளத்தில் இருக்கிறார். நான் ஐவாய்புலிப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் குருவிகுளத்திற்கு வாரம் வாரம் செல்வேன். ராமநாதன் இறந்த ஒரு வாரத்திற்கு பிறகு அவர் இறந்தது எனக்குத் தெரியும். அ.சா.1 தான் சொன்னார். இறந்த இடத்திற்கு நான் போகவில்லை.

உடலில் குத்தப்பட்ட பச்சை மற்றும் அடையாள அட்டையை வைத்து அடையாளம் கண்டதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். பிரேதத்தை குருவிகுளத்திற்கு கொண்டுவரும்போது போனேன். பகல் 3 மணியளவில் பிரேதத்தை கொண்டு வந்தார்கள். 2, 3 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். இறந்துபோனவர் என் மைத்துனர் என்பதால் அவருக்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.11.13 16:29:27 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W.10.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி.முத்துமாரி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குருவிகுளத்தில் குடியிருந்து தீப்பெட்டி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன ராமநாதன் என் உடன் பிறந்த அண்ணன். அ.சா.1 என் தகப்பனார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 2ம் எதிரி என் அண்ணனின் மனைவி. 30.03.2019 அன்று ராமநாதன் பூமாரி என்பவருக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு திருப்பூரிலிருந்து குருவிகுளம் வருவதாக தகவல் சொன்னார். பூமாரி என்பவருக்கு போன் செய்து அந்த கைபேசியில் நான் பேசினேன். என் அண்ணன் ஊருக்கு வரவில்லை. கல்லூரணி காட்டிற்குள் என் அண்ணன் இறந்து கிடந்தார். அது 10 நாட்கள் கழித்து எங்களுக்கு தெரியவந்தது. என் அண்ணன் நெஞ்சில் குத்தியிருந்த தன் மனைவியான மாரிலெட்சுமி (2ம் எதிரி)யின் பெயரில் குத்தியிருந்த பச்சை மற்றும் கழுத்தில் போட்டிருந்த அடையாள அட்டை ஆகியவற்றை வைத்து அடையாளம் கண்டு கொண்டதாக சொன்னார்கள். அப்போது அ.சா.1, அ.சா.5 ஆகியோர் அங்கு சென்றார்கள். அப்போது உடல் அழுகிய நிலையில் இருந்தது. 1ம் எதிரி, சிறார் எதிரியான பாலசுந்தரத்துடன் சேர்ந்து என் அண்ணனை கொன்றுவிட்டார்கள். 1, 2 எதிரிகளுக்குள் இருந்த

கள்ளத் தொடர்பு காரணமாக அவரை கொன்றுவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரியை எனக்கு தெரியும் என்று பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணை சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளுக்குள் எந்த தொடர்பும் இல்லை என்றும், 2ம் எதிரியை 1ம் எதிரிக்கு தெரியவே தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. போலீசாரும், அ.சா.1ம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் குருவிகுளத்தில்தான் குடியிருக்கிறேன். 2ம் எதிரியும் அங்குதான் குடியிருக்கிறார். அப்போது என்னிடம் கைபேசி இல்லை. என் அண்ணன் பூமாரியின் கைபேசிக்கு தொடர்பு கொண்டு 30.03.2019 அன்று இரவு சுமார் 7 மணியளவில் என்னிடம் பேசினார். மறுநாள் காலையில் கிளம்பி வருவதாக சொன்னார். ஆனால் வரவில்லை. அவர் வரவில்லை என்பதால் அவரது நண்பர் ரமேஷ் என்பவரிடம் கேட்டோம். அ.சா.1 கேட்டார். நான் அ.சா.1 உடன் குடியிருப்பதால் அப்போதே எனக்குத் தெரியும். அ.சா.1 கைபேசிக்கு என் அண்ணன் தொடர்பு கொள்ளவில்லை. ஊருக்கு வருவதாகவும் அ.சா.1னிடம் சொல்லவில்லை. ராமநாதன் பச்சை குத்தியிருந்ததாகவும், கழுத்தில் அடையாள அட்டை அணிந்திருந்ததாகவும் அ.சா.1 சொல்லி எனக்குத் தெரியும். என் அண்ணன் இறந்துவிட்டதாக போலீசார் சொன்னார்கள். எங்களிடம் வந்து புகைப்படத்தை காட்டி அ.சா.1–ஐ அழைத்துச் சென்றார்கள். நான் போகவில்லை. எதிரிகளுக்குள் தொடர்பு இருப்பதாக இந்த வழக்கிற்காக

பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அங்கு கிடந்தது என் அண்ணன்தானா என்பது கூட எனக்கு முறையாக தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி இருவரும் என் அண்ணனை கொலை செய்துவிட்டதாக போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் என் அண்ணன் அங்கு இறந்துகிடந்தால் நானும் போயிருப்பேன் என்றால் சரியல்ல. மறுநாள் போலீசார் எங்கள் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என் அண்ணனின் பிரேதத்தை கொண்டு வந்தபிறகு அ.சா.1 புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.11.13 16:29:37 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.